செ.வெ.எண்: 339/2016 நாள்: 08.06.2016

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.

**ந.க.எண்.ஓ5/9445/2013 நாள்: 08.06.2016**

## பத்திரிகைச்செய்தி

தமிழக அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ள "அம்மாதிட்டத்தின்" மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்கள் 10.06.2016 வெள்ளிக்கிழமை அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மூன்று வட்டங்களில் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறவுள்ளது.

அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் வேம்பனூர் வருவாய் கிராமத்திற்கு அரசு தொடக்கப்பள்ளி, பாம்பன்விளையில் வைத்தும், விளவங்கோடு வட்டத்தில் பாலூர் வருவாய் கிராமத்திற்கு, அரசு மேல்நிலைப்பள்ளி, முசாரியில் வைத்தும், கல்குளம் வட்டத்தில் திக்கணங்கோடு வருவாய் கிராமத்திற்கு, அரசு தொடக்கப்ள்ளி திக்கணங்கோட்டில் வைத்தும் காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்த அம்மாதிட்டம் மூன்றாம் கட்ட சிறப்பு முகாமில் இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட சமூகபாதுகாப்பு திட்டங்கள், பட்டாமாறுதல், உழவர் பாதுகாப்பு அட்டை, பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், குடும்பஅட்டை, வருவாய் வட்டாட்சியர் அதிகாரத்திற்குட்பட்ட நிலதாவாக்கள், குடிநீர் மற்றும் சாலை வசதி போன்ற பொதுவான மனுக்களை பொதுமக்கள் அளித்து தீர்வு காணலாம் என கன்னியாகுமரி மாவட்டஆட்சித் தலைவர் தெரிவித்துக் கொள்கிறார்.

ஓம்/-தி.சுப்பையா,
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி.),
கன்னியாகுமரிமாவட்டம்.

/உண்மைநகல் /உத்தரவுப்படி/

தலைமை உதவியாளர்(ஓ)

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.